RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt23114

# பண்பாட்டுப் புவியியல் நோக்கில் - குறுந்தொகை முல்லைத் திணைப் பாடல்கள்

**பொ. மோகன் ராஜ் [அ, *]**

[அ] தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி-620017, தமிழ்நாடு, இந்தியா

# Kuruntthokai Mullai Thinai Songs: From the Perspective of Cultural Geography

**P. Mohan Raj [a, *]**

[a] Department of Tamil, Bishop Heber College, Trichy-620017, Tamil Nadu, India

* Corresponding Author: kannitamilan1@gmail.com

Received: 10-08-2022
Revised: 03-10-2022
Accepted: 26-10-2022
Published: 03-12-2022

Check for updates

**ABSTRACT**

How the geography of particular landforms affects the cultural ecology and the cultural landscape of that land has been studied on the basis of cultural geography through the songs of the Kuruntthokai - Mullai Thinai songs. The matches between Mullai Land and Mullai Thinai laid down by Tholkappiyar have been examined. It has been studied how natural elements such as rain, clouds, flowers, land, entertainment, animals, and birds influence the culture of Mullai land, which is referred to as the forest and land nearer to the forest. It has also been studied how herds of cattle, agricultural lands, food, and clothing form the unique cultural landscapes of the land.

**Keywords:** Cultural Geography, Cultural Landscape, land, Cultural Ecology

## முன்னுரை

இயற்கையைப் பாடுவது செவ்விலக்கியங்களின் சிறப்புக் கூறு எனலாம். அதிலும் தமிழ்ச் செவ்விலக்கியங்கள் பலவும், இயற்கையையும் இயற்கையோடு இயைந்த மானிட உணர்ச்சிகளையும் தனித்தன்மையோடு பாடியுள்ளன. தமிழில் புறப்பாடல்களை விட அகப்பாடல்கள் இயற்கையின் வழியாக மனித உணர்வுகளை மிகச் சிறப்பாக காட்சிப்படுத்தி உள்ளன. அக்கால மனிதர்கள் உற்பத்திமுறையின் காரணமாக நிலத்தோடு நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்தனர். அதனால் அக்கால மக்களும் புலவர்களும் தாம் வாழும் நிலத்தின் காலநிலைகளையும், புவியியலையும், உயிர்களின் இயக்கங்களையும் இயல்பாகவே அறிந்திருந்தனர். எனவே, அவற்றைப் பாடல்களிலும் தேவைக்கேற்றபடி பயன்படுத்தியுள்ளனர். இவற்றைச் செவ்விலக்கிய நூல்களுள் ஒன்றான குறுந்தொகையிலும் காணலாம். வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவில், மிகுதியாக இயற்கை சுரண்டப்படும் தற்காலத்தில், தமிழ்ச் செவ்விலக்கியங்களில் பொதிந்துள்ள இயற்கைப் பற்றிய சிந்தனைகளை மீளாய்வு செய்வதன் மூலம் எதிர்காலத்தில் இயற்கையைப் பேணும் முறையை செம்மையாக்கலாம். குறுந்தொகையில் உள்ள 45 முல்லைத் திணைப் பாடல்களில் பாடப்பட்டுள்ள இயற்கைக் கூறுகளை பண்பாட்டுப் புவியலின் அடிப்படையில் ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## பண்பாட்டுப் புவியியல்

'அறிவியல்களின் தாய், என்றழைக்கப்படும் புவியியல் வளர்ச்சியுற்று நாளடைவில் பல்வேறு கிளைத் துறைகளாயின. அவற்றில் மனிதருக்கும் புவிக்குமான உறவை மையமிட்டு எழுந்த மானிடப் புவியியலும் (Human geography) ஒன்று. அதன் கிளைத் துறையே பண்பாட்டுப் புவியியல் எனக்கூறலாம். சூழலுக்கும் மனித பண்பாட்டிற்குமான உறவை விளக்க முயலும் துறையே பண்பாட்டுப் புவியியலாகும். இத்துறை பண்பாட்டு வட்டாரம்( Cultural Area), பண்பாட்டுப் பரவல் (Cultural diffusion), பண்பாட்டு நிலவெளி (Cultural Landscape) பண்பாட்டுச் சூழலியல் (Cultural Ecology) ஆகியவற்றை உள்ளடக்கியது. அமெரிக்காவின் பெர்க்லி(Berkley) பல்கலைக்கழகத்தைச் சார்ந்த கார்ல் ஒ சாசர் (Carl o saucer) என்பவர் பண்பாட்டுப் புவியியலின் தந்தை எனக் கருதப்படுகிறார். "பண்பாடு, நிலவெளிகளால் வளர்க்கப்படுகிறது என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு தூரம் உண்மையானது நிலவெளிகள் பண்பாடுகளால் உருவாக்கப்படுகிறது என்பதும்" எனும் அவரது வரிகள் மூலம் பண்பாட்டுப் புவியியலை நாம் நெருங்கிச் செல்லலாம் (Ramasamy, 2015).

## முல்லை நிலமும் முல்லைத் திணையும்

தமிழ் நிலத்தின் பெரும்பகுதி முல்லை நிலமே எனக்கூறலாம். அதாவது மலை அடுக்கங்களுக்கும் வயலைகளுக்கும் (Plains) இடைப்பட்ட காடும் காடு சார்ந்த நிலப்பகுதிகளும் முல்லை என்று வரையறுக்கலாம். இவை பெரும்பாலும் மேட்டுநிலங்களாலும் பாறைகளாலும் குன்றுகளாலும் அமைகின்றன. இதன் பெரும்பகுதி மேய்ச்சல் புல்வெளிகளாகவும், முட்புதற் காடுகளாகவும் அமைகின்றன. முல்லை நிலத்தின் முதன்மையான உற்பத்திமுறை மேய்ச்சல் தொழிலாகும். சிறு அளவில் வேளாண்மைத் தொழிலும் மேற்கொள்ளப்படுகின்றது. இந்நிலம் வழியாக பாயும் ஆறுகள் யாவும் தாழ்ந்த வயலைகளையும் கடலையும் நோக்கி செல்வதால் விரைவாகப் பாய்ந்தோடுகின்றன. எனவே முல்லை நிலத்தில் நீர்வளமும் வேளாண்மையும் குறைந்து காணப்படுகின்றன. மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய சில முல்லை நிலங்களில் நீர்வளமும் வேளாண்மையும் செறிந்து காணப்படுகின்றன.

மிகுந்த வெப்பநிலையையும் மிகுந்த பனிப் பொழிவையும் முல்லை நிலங்கள் பெறுகின்றன. கார் காலத்தில் மிகுந்த மழைப்பொழிவைப் பெறுகிறது. கார்கால வெப்பச்சலன இடிமழை புல்வெளிகள் மீண்டும் துளிர்க்கப் பெரிதும் உதவுகிறது. கோடையில் துன்பமடைந்த காலிகளுக்கும் (கால்நடைகள்) குளிர்ச்சியைத் தருகிறது. முல்லை நில மாலைப்பொழுது, மற்ற பொழுதுகளைக் காட்டிலும் தண்மையாகவும் முல்லை நிலத்தில் எல் சாயும் (மாலை) வேளை அழகான நிலத்தோற்றங்களோடும் காட்சியளிக்கும். இதன் அடிப்படையில் முல்லை நிலத்தின் தனித்துவமான பொழுதுகளாக கார்காலத்தையும் மாலையையும் குறிப்பிடலாம்.

தொல்காப்பியர் வகுக்கும் திணைக்கோட்பாடு. ஒவ்வொரு திணைக்குரிய (நிலத்திற்குரிய) செய்யுள்களை இயற்றும் போதும் சில விதிமுறைகளைக் கையாள வலியுறுத்துகின்றது. ஏழுதிணைகளைக் குறிக்கும் அவர் ஐந்திணைகளுக்கு முதல், கரு மற்றும் உரிப் பொருள்களை வகுத்துள்ளார். இவற்றின் அடிப்படையிலேயே பாடல்களை பாடும் வழக்கமும் இருந்துள்ளது. முல்லைத் திணையின் முதற்பொருளாக முல்லை நிலமும் பொழுதுகளாக பெரும்பொழுதான கார் காலமும் சிறுபொழுதான மாலையையும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். முல்லை நிலத்தின் சிறந்த பொழுது கார் காலம். அக்காலம் அந்நிலத்திற்கு மழையைத் தருகிறது. முல்லை நிலத்தில் நீரின் பெரும்பங்கினை உணர்த்தும் விதமாக கார் காலத்தை முல்லை திணைக்குரிய பெரும் பொழுதாக தொல்காப்பியர் வகுத்தாரோ என எண்ணத் தோன்றுகிறது. அதைப்போலவே மாலையானது ஓய்வு நேரமாகும். அன்பினை நினைந்து வருந்தும் நேரமாகவும் உள்ளதாலும் சிறந்த நிலக் காட்சிகளை உடையதாலும் மாலையை சிறுபொழுதாக வகுத்தாரோ என எண்ணத் தோன்றுகிறது. மேலும் கருப்பொருட்கள் அந்நிலத்துக்குரிய தனித்துவமான இயற்கை மற்றும் செயற்கை பொருட்கள் எனலாம். கருப் பொருட்கள் மூலம் பாடல்களை மேலும் செறிவாகவும் எளிமையாகவும் உணர்த்த இயலும் என்பதால் கருப்பொருள்களை ஒவ்வொரு திணைக்கும் வகுத்துள்ளார் எனவும் கூறலாம். முல்லைத்

திணைக்குரிய உரிப் பொருளாக இருத்தலும் இருத்தல் நிமித்தமும் உள்ளது. வேட்டைச் சமூகத்தை அடுத்து படிமலர்ச்சியடைந்த மேய்ச்சல் சமூகத்தில் காலிகள்(கால்நடைகள்) தனியுடைமைகளாக மாற்றமடைந்தன. இது ஆணாதிக்க சூழலுக்கும் கற்பினைப் போற்றி இல்லோடு பெண்கள் இருக்கும் நிலைக்கும் காரணமாயிற்று. எனவே, தொழில் பொருட்டு பிரிந்து சென்ற தலைவனை நினைத்து காத்திருத்தலை மையமிட்டு காத்து இருத்தலை முல்லைத் திணைக்குரிய உரிப்பொருளாக வகுத்துள்ளார்.

## பண்பாட்டுச் சூழலியல்

இயற்கைச் சூழல்கள் எவ்வாறு மனிதப் பண்பாட்டின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை விளக்குவதே பண்பாட்டுச் சூழலியல் எனலாம். இது "மனிதனை உள்ளடக்கிய சூழலியல் ஒழுங்கமைப்புகளைப் பற்றி ஆராய்கிறது. இயற்கையின் விளைவுகளையும் தாக்கங்களையும் மனிதன் எவ்வாறு பயன்படுத்திக் கொள்கிறான் என்பதைப் பற்றி ஆராய்கிறது" எனக் குறிப்பிடுகிறார் (Dhananjayan, 2010). முல்லைத் திணைப் பாடல்களில் பல்வேறு இயற்கைச் சூழல்கள் காட்சிப்படுத்தப் படுகின்றன. அவை மானிட உணர்ச்சிகளையும் செயல்களையும் விளக்கும் பின்னணியாக அமைகின்றன. இக்கட்டுரையில் முல்லைத்திணைப் பாடல்களில் இடம்பெறும் இயற்கைச் சூழல்களைப் பண்பாட்டு நோக்கில் ஆராய்ந்து, முடிவுகள் தரப்பட்டுள்ளன.

## மழை

வெப்பமண்டல நிலப் பகுதிகளில் மழை, மழையின் தூறல், மழையில் நனைதல், மழையைப் பார்த்தல் போன்றவை மகிழ்ச்சியின் வெளிப்பாடுகளாக காட்சிப்படுத்தப்படுகின்றன. பல பாடல்களில் மழை நேரடியாக மகிழ்ச்சியின் வெளிப்பாடாக அமைந்துள்ளன. அவை, பெருந்தண் மாரி (குறு 94), பைம்புதற் கலித்த மாரி (குறு98), மழை விளையாடும் (குறு108), பழமழை (குறு220), கழிந்த மாரிக்கு, காலமாரி (குறு 251), வீழ்உறை இனிய சிதறி (குறு 270), பட்ட மாரி (குறு 289), பெயல்தாழ்பு (குறு 314), மாரி மாமழை (குறு 319), பெய்த (குறு 323), எனப் பாடப்பட்டுள்ள இடங்களில் இருந்து அறிந்து கொள்ளலாம். சில பாடல்களில் மழை பெய்தல் தலைவிக்கு நல்விளைவாக இல்லாவிட்டாலும், அத்தலைவி மழையைத் துன்பம் தருவதாக நினைத்து இகழவில்லை. பெயல் தாழ்பு(குறு 314), மாரிமா மழை(குறு 319), இனிது வீழ்ந்தன்றே வீழ்ந்த மாமழை (குறு 391) என்றே பாடப்பட்டுள்ளது. சில பாடல்களில் மழையின் நிலையின்மை உணர்த்தப்படுகிறது. அவை, வம்ப மாரி (66) வம்பு பெய்யுமால்(382) போன்ற வரிகள் மூலம் மழையைக் கடிந்துக் கொள்வதாக அமைந்துள்ளன.

இதன்மூலம் மழை பெரும்பாலும் நற்குறியீடாகவே தமிழ்ப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன என உறுதி செய்யலாம். ஐரோப்பா போன்ற துணை வெப்பமண்டல நாடுகளில் மழை துன்பமாக அமைவதை 'Rain Rain Go away' என்ற சிறார் பாடல் வழி நாம் புரிந்துகொள்ளலாம். "மென்மையான தூறல் முகத்தில் விழும்போது ஏற்படுவது உலகத்தில் எங்குமே, இயற்கை தருகின்ற மிகச் சிறந்த இனிமையான உணர்ச்சிகளில் ஒன்று. அந்த உணர்ச்சி நிலநடுக்கோட்டுப் பகுதிகளில் தான் மிகுதியாக அனுபவப்படுகிறது. தூறல் மழை, மென்மையான மழைத்துளிகள், கூரைகளின் மீது விழுகின்ற சடசடவெனும் ஓசை, மழைத்துளிகளின் தெறிப்பு, கடற்கரையில் அலைகள் மோதித் தெறிக்கும் திவலைகளிலிருந்து உருவாகும் நீர் முத்துக்கள் போன்றவைப் பற்றிய சங்க இலக்கியக் குறிப்புகள் யாவினும் தட்பவெப்ப நிலை தருகின்ற ஓருணர்ச்சி இதுதான்." என்று கூறும் தனிநாயகம் அடிகளாரின் கருத்தினையும் பொருத்திப் புரிந்துக் கொள்ளலாம் (Thaninayagam Adikaalar, 2014).

## மேகம்

மேகங்கள் மழையைத் தருவதால் கொடையின் குறியீடாகக் கருவி மாமழை (குறு 94) எனப் பாடப்படுகிறது. கருமை நிற மேகங்களே மழையைத் தருவன. எனவே மேகங்கள் கார்புறந் தந்த(குறு 162), கார்தலை மணந்த (குறு 186) எனவும் பாடப்பட்டுள்ளன. கடுஞ்சூல் மகளிர் போல, பெருங்கலி

வானம் (குறு 287), நீர்உறு கமஞ்சூல் தண்குரல் எழிலி (குறு 314) என சூல்கொண்ட தாயாகவும் மேகம் இரு பாடல்களில் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. குளிர்ந்த நீரைத் தருவதால் சில இடங்களில் 'தண்' அடையை மேகங்கள் பெற்றுள்ளன. மேலும் அழகு என பொருள்படும் 'எழிலி' என்ற சொல்லிலும் மேகங்கள் அழைக்கப்படுகின்றன. முல்லை நிலத்தில் மழை தரும் பாங்கினைக் குறிப்பதாக இவ்வாறு மேகங்கள் பாடப்பட்டுள்ளன எனக் கொள்ளலாம்.

## பூக்கள்

பூக்களுக்கும் தமிழர்களுக்குமான உறவு நெடியது. குழந்தைக்கு முதல் பூச்சூடுதலில் தொடங்கி இறப்பு வரை இவ்வுறவு தொடர்கிறது. ஐந்து திணைகளும் பூக்களின் பெயர்களினாலே சுட்டப்படுகின்றன. போர் முறைகளும் பூக்களின் பெயர்களையே கொண்டுள்ளன. காதலர்க்கு கையுறையாகவும் பூக்கள் அளிக்கப்படுகின்றன. வேங்கை மலர்கள் மலர்வது காதலுக்குரியதாகவும் திருமணத்திற்குரியதாகவும் நன்னிமித்தமாகவும் கருதும் வழக்கம் தமிழர்களிடம் இருந்துள்ளது. திருமணத்தின் போதும் பூக்களையும் நெல்லையும் தூவும் வழக்கம் இருந்துள்ளது. "காதலை மட்டுமல்ல, நட்பை, விருந்தோம்பலை, வறுமையிலிருந்தும் தேவையிலிருந்தும் விடுபாட்டை-எதையுமே பூக்கள் வாயிலாக அக்கால மக்கள் உணர்த்தினர். சிற்றூர்களின் வழியே நொதுமலர்கள் செல்லும்போது நட்புக்கு அடையாளமாக அவர்களுக்குப் பூக்கள் வழங்கப்பட்டன. கவிஞர்களும் பாணர்களும் அரசர்களிடமும் தலைவர்களிடமும் சென்று தங்கள் வறுமையைப் போக்கிக் கொள்ள அவர்களைப் புகழ்ந்து பாடிய போது அவர்களுக்கு யானைகள், நிலங்கள், பட்டுடைகள் போன்றவை மட்டுமல்ல பொன்னாலான பூக்களும் பரிசாக அளிக்கப்பட்டன" (Thaninayagam Adikaalar, 2014).

முல்லைத் திணைப் பாடல்களில் கார்காலத்தில் பூக்கக்கூடிய முல்லையும் கொன்றையும் பல பாடல்களில் பாடப்பட்டுள்ளன. பல பாடல்களில் இவ்விரண்டு பூக்களும் பூத்தது கார் காலத்தின் வருகையை உணர்த்துவதாகவே உள்ளது. கொன்றைப் பூ, புதுப்பூ கொன்றைக் கானம்(குறு 21), தடவுநிலைக் கொன்றை(குறு 66), போதுஈன் கொன்றை(குறு 148), கொன்றைஅம் பசுவீ(குறு 183), கொன்றை ஒள்வீ(குறு 233), என்றெல்லாம் பாடப்பட்டுள்ள கொன்றைப்பூ பருவம் தெரியாமல் பூத்ததாகவும் கார்காலத்தில் பூத்ததாகவும் பொற்காசுகளை போன்றதாகவும் பசலைப் படர்ந்ததாகவும் பாடப்பட்டுள்ளது.

முல்லைப்பூ, பேதைப் பித்திகத்து(குறு 94), பாசிலை முல்லை(குறு 108), பூங்கொடி முல்லை(குறு 126), சிறுவெண் முகை(குறு 162), முல்லை மென்கொடி(குறு 186), முகை முல்லை(குறு 188), முல்லை முகை நாறும்மே(குறு 193), வெருக்குப் பல்உ ருவின் முல்லையோடு(குறு 240), முல்லைப் பசுமுகைத் தாது(குறு 323), முல்லை வெண் முகையே(குறு 358), பைங்கொடி முல்லை(குறு 382) என்றெல்லாம் சுட்டப்படும் முல்லைப் பூ கார் பருவத்தில் பூத்ததாகவும் கார்ப்பருவம் அறியாமல் பூத்ததாகவும் காட்டுப் பூனையின் பல்லை ஒத்திருப்பதாகவும் தலைவியின் பற்களை ஒத்திருப்பதாகவும் தலைவனைக் கண்டு சிரிப்பதாகவும் இடையர்கள் தலையில் அணிந்துள்ளதாகவும் பாடப்பட்டுள்ளது.

இது மட்டுமின்றி வேப்பம்பூ, பீர்க்கம்பூ, கருவிளை, ஈங்கை, காந்தள், காயா, குவளை, பொய்கை, ஆம்பல், தவளம் போன்ற பூக்களையும் வீ, அரும்பு, போது, முகை போன்ற மலரின் பல்வேறு நிலைகளையும் முல்லைத் திணைப் பாடல்களில் பாடியுள்ளனர்.

## நிலம்

பண்பாட்டை உருவாகும் சூழலமைவுகளில் நிலம் முதன்மையானது. கற்களையும் பாறைகளையும் உடையது எனும் பொருளில் வன்பரல்(குறு 65), முரம்பு(குறு 400), எனப் பாடப்பட்டுள்ளது. நீர் வளமுடையது எனும் பொருளில் நீருடை வியன்புலம்(குறு 162), தண்கார் வியன் புனம்(குறு 188) எனவும் மணத்தின் அடிப்படையில் நறுமலர்ப் புறவு(குறு 220), பூநாறு புறவில்(குறு 242) எனவும் நீர் வளம் குறைந்தது எனும் பொருளிலும், புன்புலம்(குறு 183), புயல் நீங்கு புறவு(குறு 391) என

முல்லை நிலம் நிலத்தின் தன்மையைக் குறிக்கும் நோக்கில் பல்வேறு பெயர்களில் பாடப்பட்டுள்ளன எனக் கொள்ளலாம்.

## மாலை

"மால் என்றால் மயக்கம் தருவது. மயக்குகின்ற கடவுள் என்று கண்ணனுக்குப் பின்னால் பெயர் ஏற்பட்டது. உணர்வு மயக்கம் தருவதால்தான் 'evening' என்பதற்கு 'மாலை' என்ற பெயர் வந்தது. மயக்குகின்ற உணர்வைத் தரும் பொழுது மாலை" என்பார் பண்பாட்டு ஆய்வாளர் (Paramasivan, 2016). பல முல்லைத் திணைப் பாடல்கள் மாலை துன்புறுத்துவதையும் புலம்புமாறும் உள்ளதையும் புலம்பு கொள் மாலை(குறு 314), புன்கண் மாலை(குறு 344), கையறு மாலை(குறு 387), பையுள் மாலை(குறு 391), போன்ற வரிகள் உணர்த்துகின்றன. துணையைப் பிரிந்து வாழ்வோர்க்கு ஒளி மங்கிய மாலை மட்டும் மாலை அல்ல, விடியலும் மாலை, பகலும் மாலை எனப் பாடுகிறது ஒரு பாடல் குறு 234 இல் இடம்பெற்றுள்ளன. அன்பிற்காக ஏங்கி பிரிவின் துயரை வெளிப்படுத்துகின்ற மயங்குகின்ற மாலைப் பொழுதும் பண்பாட்டை உருவாக்கும் சூழலமைவுகளில் ஒன்று எனக் கருதலாம்.

## விலங்குகளும் பறவைகளும்

முல்லை நிலத்திற்கே உரிய பசுக்களும் மான்களும் பல பாடல்களில் உவமையாகவும் உருவகமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கன்றுகளைப் பிரிந்த தாய்ப் பசு பல் ஆ, மடக்கண் குழவி(குறு 64) எனவும் ஆண் மான்களை இரலை (குறு 65, 220) என்றும் பெண் மான்களை பிணை(குறு 319) என்றும் சில பாடல்கள் குறிப்பிடப்படுகின்றன. மேலும் ஆடு(குறு 221), வெருகு எனும் காட்டுப்பூனை(குறு 220), ஆண் எருமை திரிமருப்பு எருமை எனவும் பெண் எருமை மைஆன் எனவும்(குறு 279) பாடலின் பொருண்மைக்கு ஏற்ப பல பாடல்களில் குறிப்பிடப் படுகின்றன.

கிளி(குறு 240),காக்கை(குறு 210), சேவல்(குறு 234,242), கானாங் கோழி(குறு 242), மயில்(குறு 252,391) என சில பறவைகளும் வெஞ்சின அரவு என(குறு 190) பாம்பும் சில பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

மேற்குறிப்பிட்ட மழை, கார், பூக்கள், நிலம், மாலை, விலங்குகள் மற்றும் பறவைகள் போன்றவை முல்லை நிலத்தின் சூழலமைவுகளாக அமைந்ததுள்ளன. அவையே முல்லை நிலப்பண்பாட்டை வடிவமைக்கின்றது எனக் கூறலாம். "கவிதை மீது தமிழகத்தின் இயற்கை செலுத்திய செல்வாக்கு இறுதியானதும், நீண்ட விளைவுடையதாகவும், முடிவானதாகவும் அமைந்தது" என இதனை தனிநாயகம் அடிகளார் குறிப்பிடுகிறார் (Thaninayagam Adikaalar, 2014).

## பண்பாட்டு நிலவியல்

மனிதனின் தொடர்ச்சியான செயல்பாடுகளால் மாற்றமடைந்த நிலத்திற்கும் அதன் விளைபொருளிற்கும் மனித பண்பாட்டிற்கும் இடையேயான உறவை விளக்குவதே பண்பாட்டு நிலவியல். "நிலம் அல்லது சுற்றுச் சூழலோடு ஊடாட்டம் செய்யும் மனித முயற்சியின் விளைவாக வீடு, தோட்டம், வயல், ஆறு, கோயில், குளம், வீதி, சாலை மன்றம் என்பன உள்ளிட்ட பருண்மையான அமைப்புகள் தோற்றம் பெறுகின்றன. இவ்வாறு வெறும் இயற்கையான நிலப்பரப்பு என்பது மனிதப் படைப்புகள் மூலம் தனது முந்தைய கோலத்தை மாற்றிக் கொள்ளும் நிலையில் பண்பாட்டு நிலவியல் உருவகம் பெறுகிறது" என பண்பாட்டு நிலவியலிற்கு விளக்கமளிக்கிறார் (Dhananjayan, 2010).

## மந்தை

காலிகளை அடைத்து வளர்க்கும் பட்டிகள் புன்தலை மன்றம்(குறு 64) என குறிப்பிடப்படுகிறது. சில பாடல்களில் இடையர்களும், கோவலர்களும், அண்டர்களும் குறிப்பிடப்படுகின்றனர். இடையர்கள் பாலைக் கொடுத்து கூழைப் பெறும் பண்டமாற்று முறையையும் மழையில் நனையாமலிருக்க பறி எனும் ஓலைப்பாயை பயன்படுத்தியதை குறுந்தொகையின் 22ம் பாடல் வழி அறியலாம்.

## வேளாண் நிலம்

சிறு வேளாண்மைக்கு ஏற்ற முல்லை நிலத்தில் தொடக்க காலத்தில் வேளாண்மை நடந்ததை சில பாடல்கள் பதிவு செய்கின்றன. தோட்டத்தைக் குறிக்கும் படப்பை(குறு 98), கொல்லை(குறு 186), முன்பு தரிசாக கிடந்த நிலம் எனும் பொருளில் முதைப்புணம்(குறு 155), புதியதாக உழப்பட்ட நிலம் எனும் பொருளில் புதுப்புணம்(குறு 220), உழவு நிலத்தை ஒட்டிய குறுங்காடுகளை இறும்பு(குறு 155) எனவும் வேளாண்மைக்கு பயன்பட்ட நிலங்களைக் குறிப்பிடுகின்றனர். பல பாடல்களின் வழி வரகு பயிரிட்டதை அறிமுடிகிறது. வரகின் தாளை இருவி(குறு 220) என ஒரு பாடல் குறிப்பிடுகின்றது. விதைகளைத் தூவப் பயப்படும் கலத்தை விதைக் குறுவட்டி(குறு 155) என ஒருப்பாடல் குறிப்பிடுகிறது.

## உணவும் உடையும்

பாலும்(221) முளிதயிர்(குறு 167), பல் ஆ நெய்(குறு 210) போன்ற பால் பொருட்கள், முல்லை நிலத்தில் முதன்மையான உணவாக குறிப்பிடப்படுகின்றன. இது தவிர வரகு, வெண்ணெல், வெண்சோறு போன்றவையும் குறிப்பிடப்படுகின்றன. கலிங்கம்(குறு 167) என்னும் உடையினையும் ஒரு பாடல் குறிப்பிடுகிறது.

## முடிவுரை

இயற்கையோடு இயைந்த உற்பத்தி முறையைக் கொண்ட மக்கள் குழுக்களின் வாழ்விலும் கலை - இலக்கியப் படைப்புகளிலும் இயற்கையின் தாக்கம் தவிர்க்கவியலாதவை. இயற்கை அன்னியமாதல் தனியுடைமை ஏற்படுவதிலிருந்து தோன்றுகிறது என்பர் மார்க்சிய அறிஞர்கள். தனியுடமை தோன்றிய முல்லை நிலத்தில் இயற்கை அன்னியமாதல் குறைந்த அளவில் இருந்தது என்பதற்கு முல்லைத் திணைப் பாடல்களில் பண்பாட்டுச் சூழலியல் மிகுந்தும் பண்பாட்டு நிலவியல் குறைந்து காணப்படுவதை சான்றாகக் கொள்ளலாம். தமிழ் நிலத்தைப் பொறுத்தவரை காடும் காடும் சார்ந்த பண்பாட்டுச் சூழலே முல்லை எனும் பண்பாட்டு நிலவெளியை அல்லது திணையை உருவாக்குகிறது எனும் முடிவுக்கு வரலாம்.

## References

Dhananjayan, (2010) Sanga Ilakkiyamum Panpaattu Soozhaliyalum, New Century Book House, Chennai, India.

Paramasivan, T. (2016) Samayangalin Arasiyal, Vikadan Press, Nagercoil, India.

Thaninayagam Adikaalar, (2014) Nila Ammaipum Panapatu suzhalum, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License